4 / 19

<u>சென்னை–5, வேளாண்மை ஆணையர் அலுவலக துணை இயக்குநர் (நிர்வாகம்–2) அவர்களின் செயல்முறை ஆணைகள்.</u>

<u>பிறப்பிப்பவர்:– திரு. வெ. பாலாஜி.,</u> 081946

<u>செ.மு.ஆணை எண். அநிபி.8/5159/ 2020</u> <u>நாள். 21.06.2023</u>

வேளாண்மை இயக்குநர் 30 JUN 2023 சென்னை - 5 வேளாண்மைத் துறை

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. எஸ். உதயகுமார், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது), இவ்வலுவலகம் – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அநிபி6/5159/2020, நாள். 23.12.2021.
2. அரசாணை (3டி) எண். 57, வேளாண்மை–உழவர் நலத் (வேநி9) துறை, நாள். 11.05.2023.

......

<u>ஆணை:–</u>

திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில், உப்பிலியாபுரம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்தபோது 17.09.2013 அன்று அமரரான ப. செல்வராசு அவர்களின் வாரிசுதாரர் / மகன் திரு. எஸ். உதயகுமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–71900 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பார்வை (1)–இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து, திரு. எஸ். உதயகுமார் அவர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 06.01.2022 முற்பகல் முதல் தற்காலிகமாக பணியில் சேர்ந்து கொண்டார்.

3) எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, **இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)** ஆக **06.01.2022** முற்பகல் முதல் **இவ்வலுவலகத்தில்** பணிபுரிந்து வரும் திரு. எஸ். உதயகுமார் அவர்களின் பணியினை பார்வை (2)–இல் காணும் அரசாணையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 06.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

...2

4) மேற்படி, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5) மேலும், திரு. எஸ். உதயகுமார், இளநிலை உதவியாளர் (பி.அ.) அவர்கள் தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்ட பின்னரே விதிகளின்படி இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார்.

ஒம்/-வை. பாலாஜி,
துணை இயக்குநர் (நிர்வாகம்-2).

பெறுநர்

திரு. எஸ். உதயகுமார்,
இளநிலை உதவியாளர் (பி.அ),
`பபாதி` பிரிவு, இவ்வலுவலகம்.

நகல்: `அபபி` மற்றும் `பணம்` பிரிவுகள், இவ்வலுவலகம்.
நகல்: `அநிபி-8` இருப்புக்கோப்பு.

//உத்திரவின்படி//

28/6/2023
கண்காணிப்பாளர்.

28/6/23

சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை - உழவர் நலத்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.எஸ்.உதயகுமார் என்பவரின் பணியினை 06.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, சித்திரை மாதம் 28-ம் நாள்

அரசாணை (3டி) எண்.57

நாள்:11.05.2023

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.46, வேளாண்மைத் (வேநி.9) துறை, நாள் 24.02.2021.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
3. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 5159 / 2020, நாள் 03.11.2022.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில், உப்பிலியாபுரம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணியாற்றி வந்த போது 17.09.2013 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த அமரர் ப.செல்வராசு அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு.எஸ்.உதயகுமார் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 5159 / 2020, நாள் 23.12.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்து, சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, தனியர், சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) 06.01.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 06.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.எஸ்.உதயகுமார் என்பவரின்

பணியினை 06.01.2022 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ.சா.எண்.1500, நாள்.31.03.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.1500, நாள்.08.05.2023 -இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது),
வழி: வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.3556257 / வேநி9 / 2022
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //
12/05/23
பிரிவு அலுவலர்
12/5/23